[illegible]

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092303

1. District மாவட்டம்: இராமநாதபுரம் PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு: 2022 FIR No.: மு.த.அ. எண்: 6/2022 Date: நாள்: 27.4.2022

2. (i) Act சட்டம்: ஊ.த.ச (திருத்தம்) 2018 Sections பிரிவுகள்: 7(a) ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்) 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 26.4.2022 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு 10.30 மு.ப. Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.04.2022 Time : நேரம் 08.00 மு.ப.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time : நேரம் 08.30 மு.ப.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : ~~எழுத்து மூலம்~~ / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 72 கி.மீ. மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. க. திருநாகலிங்கம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காசிநாதன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் கூலி (g) Address : முகவரி 4/30, உடையநாதபுரம், அபிராமம், கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. விஜயகுமார்,
   உதவி பொறியாளர்
   மின் வாரியம், அபிராமம், கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   ---

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமரபபிககிறேன் : அனுபபுநர க.திருநாகலிங்கம், வயது 40/2022 த/பெ கனிநாதன், 4/30, உடையநாதபுரம், கமுதி தாலுகா, அபிராமம், இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர உயர்திரு.காவல் துணை கணகாணிபபாளர அவர்கள், லஞ்ச ஒழிபபுத்துறை, இராமநாதபுரம் மாவட்டம். அயயா, நான மேலே கணட முகவரியில குடியிருநது வருகிறேன். நான மதுரை அணணா நகரில பன புரோட்டா கடையில வேலை பாரதது வருகிறேன். எனககு சொநதமாக வீடு இல்லாத நிலையில உடையநாதபுரத்தில எனககு சொநதமாக உள்ள இடத்தில சரவே எண 255/4பி ல வீடு கட்டுவதறகு தீரமானிததேன. மேறபடி வீடு கட்டுமபணி ஆரமபிபபதன முனனோடியாக அவவிடததில ஆழ்துளை கிணறு அமைதது அதில எலெகட்ரிக மோட்டார பொருததுவதறகு மறறுமாக தறகாலிக மின இணைபபு வேணடி ஆனலைனில பதிவு செயய கடநத 16.04.2022 அன்று அபிராமத்தில உள்ள பிரவுசிங் செனடருககு சென்றேன. அப்போது அங்கிருநதவரகள நீங்கள முதலில அபிராமம் இ.பி. ஆபிசிறகு சென்று ஆவணங்கள சரிபாரதத பினபு அவரகளின உததரவுபபடி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. N. Rajeswari Rank Insp. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V & A.C., Ramanathapuram ...on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. திருநாகலிங்கம்
27.4.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station 27/4/22
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.04.2022, 09.30 மணி.

Name: பெயர் உன்னி கிருஷ்ணன். சி.
Rank: நிலை கா.து.க., No. எண் ஊ.த.க. பிரிவு
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 6/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

தான் வந்து பதிய வேண்டும் இல்லையென்றால் உங்கள் பதிவை அவர்கள் ரத்து செய்துவிடுவார்கள் என்று கூறினார்கள். ஆகையால் நான் கடந்த 18.04.2022 அன்று காலை 10.00 மணிக்கு அபிராமம் E.B. ஆபிஸ் சென்று அங்கிருந்த A.E திரு.விஜயகுமார் அவர்களை பார்த்து விபரத்தை கூறியபோது அதற்கான நகல் ஆவணங்களான பத்திரம், பட்டா மற்றும் பாண்டு பத்திரம் ஆகியவற்றை அவர் கேட்டதற்கிணங்க அவரிடம் ஒப்படைத்தேன். அதற்கு அவர் இடத்தை பார்த்துவிட்டு பதில் சொல்கிறேன் என்று கூறி எனது போன் நம்பரை வாங்கிக் கொண்டார். அதன் பின்பு கடந்த 19.04.2020 அன்று மாலை 3.00 மணியளவில் மேற்படி திரு.விஜயகுமார் எனது இடத்திற்கு வந்து இடத்தை பார்த்துவிட்டு என்னிடம் மறுநாள் அலுவலகத்திற்கு வந்து தன்னை பார்க்குமாறு சொன்னார். அதன்படி 'நான் மறுநாள் 20.04.2022 அன்று காலை சுமார் 10.00 மணிக்கு அபிராமம் E.B. அலுவலகம் சென்று திரு.விஜயகுமார் அவர்களை சந்தித்து நீங்கள் இடத்தை பார்த்துவிட்டீர்களே, ஆன்லைனில் பதிவு செய்ய அனுமதி கொடுங்கள், நான் ஹோட்டல் வேலைக்கு போகவேண்டும் என்று கூறினேன். அப்போது மேற்படி விஜயகுமார் அவர்கள் நான் மின் இணைப்பு கேட்ட இடம் எனக்கு உரிமைப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் விதமாக வி.ஏ.ஓ. அவர்களிடம் ஒரு சான்றிதழ் வாங்கி வரச் சொன்னார். அதன்படி நான் மீண்டும் அவ்விடமிட்டு சென்று வி.ஏ.ஓ. அவர்களை சந்தித்து அச்சான்றும் பெற்று, கடந்த 22.04.2022 அன்று அலுவலகம் சென்றபோது அவ்விடம் A.E. விஜயகுமார் இல்லாமல் இருந்த காரணத்தினால் மாலை 4.00 மணிவரை காத்திருந்த பின்பு எனது தொலைபேசி மூலம் A.E. விஜயகுமாரை தொடர்பு கொண்டு தாங்கள் கூறியபடி வி.ஏ.ஓ. சான்றும் பெற்று வந்துள்ளேன், இதை அலுவலகத்தில் கொடுத்துவிட்டு போகட்டுமா என்று கேட்டேன். அதற்கு மறுப்பு தெரிவித்த A.E. விஜயகுமார், திங்கட்கிழமை நேரடியாக வி.ஏ.ஓ. சான்றுடன் வருமாறு சொன்னார். பின்பு நான் 25.04.2022 அன்று காலை 10.00 மணிக்கு A.E. விஜயகுமார் அவர்களை சந்தித்து மேற்படி சான்றிதழை கொடுத்த போது நீங்கள் போங்கள், போர்மேனை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார். பின்பு அன்று மாலை போர்மேன் திரு.பூப்பாண்டி என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது

இடத்திற்கு வருவதாக கூறி அவ்வாறே வருகை தந்து பார்த்துவிட்டு வயரிங்கில் ஒரு சில மாற்றங்கள் செய்து A.E. விஜயகுமார் அவர்களை பார்க்கச் சொன்னார். பின்பு அவரது அறிவுரையின்படி நான் வயரிங் செய்திருந்ததற்கு சில மாற்றங்கள் செய்து, 26.04.2022 அன்று காலை 10.30 மணிக்கு அலுவலகம் சென்று A.E. விஜயகுமார் அவர்களை பார்த்து எனது விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்ய அனுமதி தரும்படி கோரினேன். அதற்கு அவர் உனது இடம் 100 அடிக்கு மேல் இருந்தால் மின் கம்பம் செலவு உட்பட உள்ள அரசு செலவுகள் அனைத்தையும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும் என கூறி அதற்கு ஒரு மனுவையும் என்னிடம் எழுதி வாங்கினார். மேலும் இங்குள்ள நடைமுறைகள் பற்றி போர்மேன் உன்னிடம் சொல்லலையா என்றும் ரூபாய் 5,000/- அலுவலக செலவிற்கும் மற்றும் இதர நபர்களுக்கும் கொடுப்பதற்கு கொடுத்தால் மட்டும் தான் ஆன்லைனில் பதிவு செய்ய அனுமதிக்க முடியும் என்று கூறினார். அதற்கு நான் மிகவும் கஷ்டப்படுவதாகவும், ஹோட்டல் வேலை பார்த்து குடும்பம் நடத்தி வருவதாகவும் அவ்வளவு பணம் கொடுப்பதற்கு என்னிடம் இல்லை என்றும் பார்த்துச் செய்யுங்கள் என்று கேட்டதற்கு ரூபாய் 3,500/- கொடு, ரூபாய் 1,500/-ஐ நான் எடுத்துக் கொண்டு மீதமுள்ள ரூபாய் 2,000/-ஐ மற்றவர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிடுவேன் என்று சொன்னார். எனது இடத்திற்கு மின் இணைப்பு பெற லஞ்சமாக ரூபாய் 3,500/- கொடுக்க விருப்பம் இல்லாததால், என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட A.E. திரு.விஜயகுமார் என்பவர் மீது நடவடிக்கை எடுத்து எனது வீடு கட்டுமானம் தொடங்க உள்ள இடத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ஆவண செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு அய்யா, இன்று 27.04.2022 காலை 8.00 மணிக்கு இம்மனுவை பெற்றுக்கொண்டு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 6/2022 பிரிவு 7(a) ஊழல் தடுப்புச் சட்டம் (திருத்தம்) 2018ன்படி காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். ஒப்பம் S.உன்னிகிருஷ்ணன், 27/04/2022 D.S.P. V&AC, Ramnad. இதன் அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

27/4/22

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.